அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 305

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
5 செப்தெம்பர் 1985

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

1. புகையிரதம் மூலம் பிரயாணஞ் செய்தற்கான வகுப்பு.
2. வார இறுதி நாட்களிலும் பொதுவிடுமுறை தினங்களிலும் பணிபுரிதற்கான கொடுப்பனவு.
3. நிலையப்படி.
4. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்குமான இடைநேர்வுச் செலவு.

---

கீழ்க்காணும் 1-ஆம், 2-ஆம், 3-ஆம் பந்திகளின் கீழ் அமைந்த கொடுப்பனவுகளுக்காக 1985-ஆம் ஆண்டின் சேமிப்பும் 1986 தொடக்கம் ஏற்பாடுகளும் பயன்படுத்தப்பட வேண்டும்.

(1) புகையிரதம் மூலம் பிரயாணஞ் செய்தற்கான வகுப்பு

---

29-டிசம்பர் 1981 ஆம் திகதியையும் 197 ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 4-( XXII )ஆம் பந்தி தொடர்பானது.

வருடமொன்றுக்கு புதிய திரட்டிய வேதனமாக 18,600/- ரூபாவைப் பெறும் ஒரு அரசாங்க உத்தியோகத்தர் புகையிரதம் மூலமாக 1-ஆம் வகுப்பில் பிரயாணஞ் செய்ய உரித்துடையவர்.

..6

(2) வாரஇறுதி நாட்களிலும் பொதுவிடுமுறை தினங்களிலும் பணிபுரியும் சில உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு.

12-06-1984 ஆம் திகதியையும் 256-ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 1-ஆம், 2-ஆம் பந்திகள் தொடர்பானது.

(1) சுற்றறிக்கையின் 1-ஆம் பந்தியில் குறித்துக்காட்டப்படாத ஏதேனும் அவசர கடமைக்காக அழைக்கும் பொழுது ஓர் உத்தியோகத்தருக்கு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

(2) 2-ஆம் பந்தியில் உள்ள ஆகக் குறைந்த எல்லையாகது மூன்று நாட்கள் என்னும் தேவை அகற்றப்படுகிறது.

(3) நிலையப்படி

தாபனக் கோவையின் 1/111-ஆம் அத்தியாயத்தின் 2-ஆம் பிரிவின் கீழ் ஓர் அரசாங்க உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட நிலையப் படியானது அவரது புதிய திரட்டிய மாதாந்தச் சம்பளத்தின் 10(பத்து)% வீதமாக அதிகரிக்கப்படுகிறது.

(4) இடைநேர்வுச் செலவு

01-08-1985 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது

தாபனக் கோவையின் XIV -ஆம் அத்தியாயத்தின் 17.2 பிரிவின் கீழ் ஓர் அரசாங்க உத்தியோகத்தருக்கும் கூட்டுத்தாபன ஊழியருக்கும் வழங்கப்படக் கூடிய இடைநேர்வுச் செலவு வருமாறு.

| | ரூ. ச. |
|---|---|
| 1 மைலுக்கு மேற்பட்ட தூரம் | 10 . 00 |
| 1 மைலுக்குக் குறைந்த தூரம் | 5 . 00 |

ஒப்பம்: டி. பி. ஜ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.